# <u>பொருள்</u>

நகராட்சிக்கு சொந்தமான அனாதைமடம் இடத்தில் வருவாய் துறையினர் தங்களது நிலம் என விளம்பர பலகை அவ்விடத்தில் வைத்ததை அடுத்து நகர்மன்ற தலைவர் தமது தலைமையில் மன்ற உறுப்பினர்கள் மாவட்ட ஆட்சியரை சந்தித்து விபரங்களை தெரிவிக்கப்பட்டது எனவும் இதனை தொடர்ந்து நிர்வாகம் சார்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் கைவசம் உள்ள ஆவணங்களின் விபரங்கள் ஆகியவற்றை குறித்தும் மேல்நடவடிக்கை எடுப்பது குறித்தும் விவாதித்து முடிவு எடுக்க நகர்மன்றத்தின் ஒரு சிறப்பு கூட்டத்தினை 25.01.2010– அன்று காலை 11.00 மணிக்கு கூட்டவும் நகர்மன்ற தலைவர் அவர்கள் 12.01.2010 – அன்று நகராட்சி ஆணையருக்கு வழஙகிய கடிதத்தில கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கீழ்கண்டவாறு உள்ள விபரஙகள் மன்றத்தின் தகவலுக்கும் மேல் நடவடிக்கைக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

நாகர்கோவில் நகராட்சிக்கு சொந்தமானநகரளவு எண். என்.4/13-2-ல் 8.55 ஏக்கர் அளவிலான திரு அவிட்டம் திருநாள் ஞாபகார்த்த அனாதைமடம் உள்ளது. மேற்படி இடத்தில் வருவாய் துறைக்கு சொந்தமான இடம் என்று பெயர் பலகை வைத்திருப்பதாக 08.12.2009 அன்று காலை சுமார் 11.30 மணி அளவில் நாகர்கோவில் நகர்மன்றதலைவர் அவர்களால் நகராட்சி ஆணையருக்கு தொலைபேசியில் தகவல் தெரிவிக்கப்பட்டு ஆணையர் அவர்களின் உத்தரவின்பேரில் நகரமைப்பு அலுவலர் மற்றும் அதிகாரிகள் அனாதைமடம் இடத்திற்கு சென்று பார்வையிட்டபோது அவ்விடத்தின் நுழைவாயிலில்“ வருவாய் துறைக்கு சொந்தமான இடம்” என பெயர் பலகை வைக்கப்பட்டிருந்தது காணப்பட்டது.

இது குறித்து அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது நகராட்சியிடம் உள்ள ஆவணஙகளை காண்பிக்குமாறு தெரிவித்தார். இவ்விடம் திருவிதாஙகூர் சமஸ்தானத்தில் இருந்து நகராட்சிக்கு ஒப்படைத்தாக தெரியவந்ததால் பல ஆண்டுகளுக்கு முந்தைய மிக பழமையான ஆவணஙகள் தேடும் பணி மேற்கொள்ளப்பட்டது. பின்னர் 09.12.2009 அன்று காலை சுமார் 8.30 மணி அளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் முகாம் அலுவலகத்தில் சந்தித்து நகராட்சியில் கிடைக்கப்பெற்ற விவரஙகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் நேரில் சந்தித்து விவரம் தெரிவிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இப்பிரச்சனையை மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் விசாரணைக்கு கொண்டு சென்று விசாரணை அடிப்படையில் முடிவு செய்து கொள்ளலாம் எனவும் அதுவரையிலும் தற்போதைய நிலையை தொடரலாம் என தெரிவித்தார். மேலும் இவ்வலுவலக ந.க.எண்.20522/2009/எப்.1 நாள் 10.12.2009–ன் படி மேற்படி இடம் நகராட்சிக்கு சொந்தமானது என்பதற்குரிய நகல் ஆவணஙகள் அடஙகிய கடிதம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பபட்டது.

மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் கடிதம் எண். எம்.3/45965/2009 நாள் 16.12.1009 மற்றும் 23.12.2009 தேதிய கடிதஙகளின்படி மேற்படி இடத்தின் கைவச அனுபவம் மற்றும் உரிமையினை நிலைநாட்டும் அசல் ஆவணஙகளுடன் 31.12.2009 அன்று காலை 11.00 மணியளவில் ஆணையரை நேரில் ஆஜராக தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் ஆணையரால் நேரில் ஆஜராக்கப்பட்டு மேற்படி இடத்தின் கைவச அனுபவம் உரிமையினை நிலைநாட்டும் கீழ்கண்ட அசல் ஆவணஙகளை சமர்ப்பிக்கப்பட்டது.

1. நாகர்கோவில் நகரசபையின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 33–ன் கீழ் வெளியீடு செய்யப்பட்ட 1956–1957 – முதல் 1960 –1961 , 1962– 1963 முதல் 1974–1975 , 1978–79 , 1979–80 , 1985–86 , 1987– 1988 முதல் 1989–90 , 1991 –1992 வருடஙகளின் நிர்வாக அறிக்கைகளில் மலையாளம் ஆண்டு 1122–ல் ( 1946–ம் ஆண்டு) ஸ்ரீ அவிட்டம் திருநாள் ஞாபகார்த்த முனிசிப்பல் அனாதைவிடுதி என்ற ஒரு ஸ்தாபனம் மேற்கண்ட அனாதைமடம் மைதானத்தில் ஏற்படுத்தப்பட்டு அந்த ஸ்தாபனம் நடத்துவதற்காக நகரசபையிலிருந்து ரூ.500/– நிதி வழஙகப்பட்டு நாகர்கோவில் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது என்ற பதிவுகள்

2. 1988–89–ம் ஆண்டு கணக்குகளின் அனாதை விடுதியின் தணிக்கை அறிக்கையில் மேற்கண்ட அனாதை இல்லம் சீராக நடத்தப்படுவதற்கு சுமார் 12 ஏக்கர் நிலம் நாகர்கோவில் நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது எனவும் , மேற்படி ஒப்படைக்கப்பட்ட இடத்தில் சாலைகள் அமைத்தும், சரலூர் மாட்டுச்சந்தை மற்றும் மீன்சந்தையும் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது என குறிப்பிடப்பட்டுள்ளது.

3. அரசாணை எண்.2545 உள்துறை நாள் 09.09.1958–ன்படி மேற்கண்ட அனாதைமடம் மைதானத்தில் செயல்பட்டு வந்த ஸ்ரீ அவிட்டம் திருநாள் ஞாபகார்த்த அனாதை விடுதியை நகராட்சி ஆணையரிடம் ஒப்படைக்கப்பட்டு அது தொடர்பாக நகர்மன்ற தீர்மானம் எண்.247 நாள் 13.12.1958 ன் படி நகராட்சி ஏற்று நடத்த ஒரு குழு அமைக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

4. மேற்கண்ட இடமும் அதில் அமைந்திருந்த ஸ்ரீ அவிட்டம் திருநாள் ஞாபகார்த்த அனாதை விடுதியும் நாகர்கோவில் நகர்மன்றத்திற்கு சொந்தமானது என்பதற்குரிய ஆதரவு ஆவணஙகளாக நிறைவேற்றப்பட்ட நகர்மன்ற தீர்மான எண்கள்

| | |
|---|---|
| நகர்மன்ற தீர்மானம் எண். 365 | நாள் 20.10.1962 |
| நகர்மன்ற தீர்மானம் எண்.344 | நாள் 20.10.1962 |
| நகர்மன்ற தீர்மானம் எண்.424 | நாள் 17.11.1962 |
| நகர்மன்ற தீர்மானம் எண்.510 | நாள் 28.12.1962 |
| நகர்மன்ற தீர்மானம் எண்.552 | நாள் 11.02.1963 |
| நகர்மன்ற தீர்மானம் எண்.139 | நாள் 15.06.1963 |

| | |
|---|---|
| நகர்மன்ற தீர்மானம் எண்.219 | நாள் 22.07.1963 |
| நகர்மன்ற தீர்மானம் எண்.259 | நாள் 02.08.1963 |
| நகர்மன்ற தீர்மானம் எண்.337 | நாள் 28.09.1963 |
| நகர்மன்ற தீர்மானம் எண்.541 | நாள் 25.01.1964 |
| நகர்மன்ற தீர்மானம் எண்.542 | நாள் 25.01.1964 |
| நகர்மன்ற தீர்மானம் எண்.531 | நாள் 21.12.1964 |
| நகர்மன்ற தீர்மானம் எண்.498 | நாள் 26.11.1965 |
| நகர்மன்ற தீர்மானம் எண்.358 | நாள் 05.09.1975 |
| நகர்மன்ற தீர்மானம் எண்.359 | நாள் 05.09.1975 |
| நகர்மன்ற தீர்மானம் எண்.507 | நாள் 09.01.1976 |
| நகர்மன்ற தீர்மானம் எண்.509 | நாள் 09.01.1976 |
| நகர்மன்ற தீர்மானம் எண்.616 | நாள் 05.03.1976 |
| நகர்மன்ற தீர்மானம் எண்.631 | நாள் 05.03.1976 |
| நகர்மன்ற தீர்மானம் எண்.632 | நாள் 05.03.1976 |
| நகர்மன்ற தீர்மானம் எண்.880 | நாள் 25.03.1977 |
| நகர்மன்ற தீர்மானம் எண்.80 | நாள் 06.06.1977 |
| நகர்மன்ற தீர்மானம் எண்.415 | நாள் 06.03.1978 |

5. மேலும் நாகர்கோவில் நகராட்சி அனாதை விடுதியில் தெற்குபாகத்தில் பாதை விரிவாக்கம் தொடர்பாக திரு எஸ்.நாராயணநாடார் எனபவரால் நாகர்கோவில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.268/1962 –ன் மீது நகராட்சி ஆணையாளர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வாதுரையில் மேற்படி இடத்தின் உரிமை தொடர்பாக அரசால் பிச்சைக்காரர்கள் விடுதி கட்டுவதற்காக கையகப்படுத்தப்பட்டு நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது என குறிப்பிடப்பட்டும் அதனடிப்படையில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் சம்மதத்தின் பேரில் வழக்கு தள்ளுப்படி செய்யப்பட்டுள்ளது.

6. மேற்கண்ட அனாதை விடுதியின் வளாகத்திற்குள் குடியிருந்த திரு என்.பாண்டியன் வகையறாக்களை வெளியேற்றி தெற்கு பக்கத்தில் சுற்று சுவர் கட்டுவதற்கு ஏதுவாக நகராட்சியின் மூலம் ரூ.1500/– அவ்விடுதியை நிர்வகிக்க ஏற்பட்ட அறநிதியிலிருந்து வழஙகப்பட்டுள்ளது .

7. மேலும் தமிழ்நாடு அரசால் கன்னியாகுமரி மாவட்டம் குறித்து வெளியிடப்பட்ட 1995–ம் ஆண்டு அறிவிக்கையில் மேற்கண்ட ஆதரவற்றோர் விடுதி நாகர்கோவில் நகராட்சி பராமரிப்பில் உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

8. அரசாணை எண்.2545 நாள் 09.09.1958 மற்றும் 1515 நாள் 26.05.1959 ஆகியவைகளின்படி முன்னாள் திருவாங்கூர் சமஸ்தானத்தால் தனியார் குழுவின்

பொறுப்பிலிருந்து விடுவித்து திரு அவிட்டம் திருநாள் ஞாபகார்த்த அனாதை விடுதியினை நாகர்கோவில் நகராட்சி ஆணையாளர் வசம் ஒப்படைக்கப்பட்டது என்பது தொடர்பான 1981–82, 1983–84, 1984–85 , 1985–86 , 1986–87 , 1988–89 ஆகிய நிதி ஆண்டுகளுக்குரிய தணிக்கை அறிக்கைகள்.

9. மேலும் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தவைர் (பெ) அவர்களின் கடிதம் எண்.ஒ.மு.எண்.131354/85 நாள் 01.04.1986–ன் (ஆணையருக்கு முகவரியிட்டது) மேற்கண்ட அனாதை விடுதி நாகர்கோவில் நகராட்சியின் கட்டுப்பாட்டிலும் பராமரிப்பிலும் அமைந்துள்ளது என தெரிவிக்கப்பட்டது .

10. மேற்படி அனாதைமடம் மைதானத்தில் கனரக ( லாறி ) வாகனஙகள் நிறுத்துவதற்கு 2006–2007 முதல் 2009–2010 வரை உரிமம் வழஙகப்பட்டதற்கான தீர்மானம்.

11. மேற்படி அனாதைமடம் மைதானத்தில் தனியார் மூலம் நடத்தப்படும் கேளிக்கை / பொது நிகழ்ச்சிகள், அரசு துறை சார்ந்த பொது நிறுவனஙகளால் நடத்தப்படும் நிகழ்ச்சிகள், அரசியல் கட்சிகளின் பொதுகூட்டஙகள், மற்றும் சர்க்கஸ் போன்ற நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு நில வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு கன்னியாகுமரி மாவட்ட அரசிதழில் மாவட்ட ஆட்சித்தலைவர் வழியாக நாள் 16.06.2008–ல் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

12. மேற்படி திரு அவிட்டம் திருநாள் ஞாபகார்த்த அனாதைவிடுதியை ரயில்வே காவல்துறை துணை தலைமை ஆய்வாளர் அவர்களால் ஆய்வு மேற்கொண்டு 09.06.1973–ம் தேதிய அனாதைவிடுதியின் மீதான ஆய்வு அறிக்கை

13. 1999–2000–ம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய கணக்கு முறை (New Accounting System) பட்டியல் 1–ல் மேற்படி அனாதைமடம் இடம் சொத்துபட்டியலில் நாகர்கோவில் நகராட்சிக்கு பாத்தியப்பட்டது என குறிப்பிடப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் அஙகீகரிக்கப்பட்டது.

மேற்படி அசல் ஆவணஙகள் 13.12.2009 அன்று மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட விசாரணையின்போது ஆணையர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டதில் மேற்கண்ட ஆவணஙகள் அனாதைமடம் நில உரிமைக்கான ஆவணஙகளாக கருத இயலாது என தெரிவிக்கப்பட்ட நிலையில் ஆணையாளரின் வேண்டுகோளின்படி அரசாணை எண்.2545 உள்துறை நாள் 09.09.1958. அரசாணை எண்.1515 உள்துறை நாள் 26.05.1959 மற்றும் அரசாணை எண்.1513 உள்துறை நாள் 26.05.1959 ஆகிய அரசாணை நகல்களை வழஙக கோரி நகராட்சி நிர்வாக இயக்குனர் வழியாக அரசு செயலாளர் உள்துறை அவர்களுக்கு இவ்வலுவலக ந.க.எண்.20522/2009/எப்.1 நாள் 10.12.2009–ன் படி கோரியுள்ளதால் நில உரிமைக்கான ஆவணஙகளை சமர்ப்பிப்பதற்கு போதிய கூடுதல் கால அவகாசம் கேட்டதன் பேரில் 05.02.2010– அன்று மேற்கண்ட ஆவணஙகளை சமர்ப்பிக்குமாறு மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

தற்போது கூடுதல் ஆவணங்களாக நாகர்கோவில் நகராட்சி அசையா சொத்து விபரப்பட்டியல் பதிவேடு – VI –ல் 01.04.1974–ல் மேற்கண்ட அனாதைமடம் சொத்து விபரம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நகராட்சிகளின் ஆய்வாளர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.31769/68/A3 நாள் 14.08.1968–ன் படி பராமரிக்கப்பட்ட இவ்வலுவலக கோப்பு எண்.10120/68/எப்.1 –ல் மேற்படி சொத்து நகராட்சிக்கு சொந்தமானதாக பட்டியலிடப்பட்டுள்ளது.

இவ்வலுவலக கோப்பு எண்.26667/96/எப்.1–ல் அனாதைமடம் மைதானத்தில் அனுமதியின்றி நிறுத்தப்பட்டிருந்த கனரக வாகனங்கள் (லாரி) அப்புறப்படுத்துதல் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அப்போதைய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நகராட்சி ஆணையருக்கு எழுதப்பட்ட கடிதங்களில் மேற்கண்ட இடம் நகராட்சிக்கு சொந்தமானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் P.C.Para No.63/Camp/2002 நாள் 03.06.2002–ல் அப்போதைய மத்திய விளையாட்டு துறை இணை அமைச்சர் அவர்களின் கோரிக்கையின்படி அனாதைமடம் மைதானத்தில் விளையாட்டு இளம் வீரர்கள் தங்கும் விடுதி கட்டுவதற்கு இடம் ஒதுக்கீடு செய்து வழஙகுமாறு தெரிவிக்கப்பட்ட நிலையில் நாகர்கோவில் நகராட்சியிலிருந்து மாற்று இடம் தேர்வு செய்யப்பட்டு நகராட்சி ஆணையரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராச்சி முதன்மை செயலர் / ஆணையர் , தமிழ்நாடு ஆவணக்காப்பகம், எழும்பூர், சென்னை – 8 கடித எண்.8619/S1/(அ.ந)/09 நாள் 06.01.2010–ன் படி **இவ்வலுவலகத்தில் அரசிதழில் பிரசுரிக்கப்பட்ட அரசாணைகளின், நகல்கள் தவிர, இத்துறையில் பாதுக்காக்கப்பட்டு வரும் மூல அரசாணைகளின் நகல்கள் அரசு தலைமைச் செயலகத்துறைகளைத் தவிர அரசு அலுவலகஙகள், அரசு சார்ந்த நிறுவனஙகள் மற்றும் பொதுமக்களுக்கு வழஙகப்படுவதில்லை. எனவே பார்வையில் காணும் தஙகள் விண்ணப்பத்தில் / கடிதத்தில் கேட்டுள்ள அரசாணையின் நகலினை பெற சம்மந்தப்பட்ட துறையின் “அரசு முதன்மை செயலர், உள்துறை தலைமைச் செயலகம் , சென்னை – 9 என்ற முகவரியை அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறது** என தெரிவித்ததின் படி அனாதைமடம் உரிமை தொடர்பாக கோப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணைகளின் நகல்கள் ஆவணக்காப்பகத்திலிருந்து பெற்று வழஙகுமாறு கேட்டு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.20522/2009/எப்.1 நாள் 11.01.2010–ன் படி சம்மந்தப்பட்ட அரசு செயலர் அவர்களுக்கு நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்கள் வழியாக கடிதம் அனுப்பப்பட்டு மேல் நடவடிக்கையில் உள்ளது.

மேற்கண்ட விபரஙகள் மன்றத்தின் தகவலுக்கு.

கோப்பு எண்.20522/2009/எப்.1

**அலுவலக குறிப்பு – மன்றம் முடிவு செய்யலாம்.**

தீர்மான எண் : 724 – நாள் 25.01.2010. நகராட்சிக்கு சொந்தமான அனாதை மடம் 1946.ம் ஆண்டு முதல் நகராட்சியின் சொத்தாக அனுபவத்திலும், பராமரிப்பிலும் தொடர்ந்து வருவதற்கான உறுதியான ஆவணங்கள் கிடைத்துள்ளன.

அனாதை மடம் துவங்குவதற்கான அடிக்கல் நாட்டு விழாவின் கல்வெட்டு இன்றும் அவ்விடத்திலுள்ள பழமையான ஒரு கட்டிடத்தில் சரித்திர சான்றாக உள்ளது.

மேற்படி வரலாற்று சுவடான கல்வெட்டில்

**"SRI AVITTAMTIRUNAL MEMORIAL MUNICIPAL DESTITUTE HOME, NAGERCOIL FOUNDATION STONE LAID BY SACHIVOTTAMA SIR.C.P.RAMASWAMI AIYAR K.C.S.I.K.C.I.E.L.L.D, DEWAN OF TRAVANCORE.**

| | | |
|---|---|---|
| **P.MOHAMMAD KUNJU** | **8-8-1121** | **A. NESAMONEY** |
| **COMMISSIONER** | **21-3-1946** | **CHAIRMAN** |

என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

மேலும் மன்ற பொருளில் குறிப்பிட்டுள்ள மாவட்ட வருவாய் அலுவலரிடம் இந்நகராட்சி ஆணையரால் சமர்பிக்கப்பட்ட ஆவணப்பட்டியலில் வரிசை எண் 1 முதல் 13 வரை குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் படியும் மேற்படி இடம் 1946.ம் ஆண்டு முதல் தொடர்ந்து நகராட்சியின் இடமாக இருந்து வருவது உறுதி செய்யப்படுகிறது.

நகராட்சிகளின் ஆய்வாளர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 31769/68/அ3 நாள் 14–08–1968–ன்படி பராமரிக்கப்பட்ட இவ்வலுவலக கோப்பு எண் 10120/1968/எப்1.ன் படி அனாதை மடம் அமைந்துள்ள சர்வே எண்கள் 1664, 1665, 1671 முதல் 1674 வரை உள்ள 11 ஏக்கர் 5 செண்ட் 565 சதுர லிங்ஸ் இடம் நகராட்சியின் சொத்து என்ற விபரம் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் பீச்ரோடு மற்றும் பாண்டியன் என்பவருக்கு 12 செண்ட் கொடுத்தது போக மீதம் 10 ஏக்கர் 46 செண்ட் 586 சதுர லிங்ஸ் இடம் நகராட்சியின் அசையா சொத்து என்று நகராட்சி அசையா சொத்து விபர பதிவேடு VI.ல் 01–04–1974..ல் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் காளை சந்தை, மீன் சந்தை, பீச்ரோடு மற்றும் அனாதை மடம் ஆகியவை அடங்கும். இதில் காளை சந்தை மற்றும் மீன் சந்தை ஆகியவை வருவாய் துறையின் ஆவணங்களில் இன்றளவும் நகராட்சி ஆணையர் பெயரிலேயே உள்ளது. மேலும் வருவாய் துறையின் பழைய ஆவணங்களில் (A – Register) மேற்படி இடம் அந்நுவற்றிகுளம் மடம் சொத்து என குறிப்பிடப்பட்டுள்ளது. அந்நுவற்றிகுளம் மடத்தின் தற்போது உள்ள வாரிசுதாரர்களை நேரில் சென்று கேட்ட போது இந்த இடத்தை நகராட்சிக்கு வேண்டி செண்ட் ஒன்றுக்கு ரூ நான்கு (ரூ.4/–) பொன்னுவிலை கொடுத்து சுமார் 12 ஏக்கர் வாஙகப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்கள். ஆனால் வருவாய் துறையின் புதிய சர்வே ஆவணத்தில் ஒரு பகுதி நகராட்சிக்கும் ஒரு பகுதி அரசு புறம் போக்கு என்றும் மாற்றப்பட்டுள்ளது. இந்த மாற்றத்திற்கான ஆவணஙகளை வருவாய் துறையினர் நகராட்சிக்கு கொடுக்கவும் வருவாய் துறையினர் தக்க நடவடிக்கை எடுத்து

தவறுதலாக அரசு புறம்போக்கு என்று இடம் பெற்றிருப்பதை மாற்றி நகராட்சிக்கு சொந்தமான இடம் என மாற்றிதரவும் வருவாய் துறையினரை கேட்டுக்கொள்ள வேண்டும்.

அரசின் அங்கீகாரத்தோடு சுமார் 64 ஆண்டு காலத்திற்கும் மேல் இந்த இடத்தை நகராட்சி தொடர்ந்து பராமரித்து பாதுகாத்து வளர்ச்சிபணிகள் பல செய்து வருவதாலும், இதுவரை நில உரிமை சம்மந்தமாக அரசோ அல்லது தனியாரோ எந்தவித ஆட்சேபனையும் எழுப்பப்படாத நிலையின் இன்றுவரை நில உரிமை தொடர்பாக எந்த வித வில்லங்கத்திற்கும் உட்படாத இந்த இடத்தின் மீது வருவாய் துறைக்கு ஏதாது உரிமையிருப்பதாக கருதினாலும் கூட எதிர்நிலை உடைமையின்படி இந்த சொத்து நகராட்சிக்கே சொந்தமானதாகும்.

1946 முதல் இன்றுவரை நகராட்சியின் அனுபவத்திலும், பராமரிப்பிலும் இருந்து வரும் நகராட்சிக்கு சொந்தமான அனாதை மட வளாகத்தினுள் நகராட்சிக்கு எவ்வித முன்னறிவிப்புமின்றி ''இது வருவாய் துறைக்கு சொந்தமான இடம்'' என்ற அறிவிப்பு பலகையை அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் மேற்படி இடத்தில் நாட்டியது கண்டிக்கதக்கது. அவர்மீது துறை மூலம் தக்க நடவடிக்கை எடுக்க மாவட்ட நிர்வாகத்தையும் அரசையும் கேட்டுக்கொள்ள வேண்டும்.

இப்பிரச்சினை உள்ளாட்சி துறைக்கும் வருவாய் துறைக்கும் உள்ள பிரச்சினையாக மன்றம் கருதுகிறது. இது சம்மந்தமாக மாவட்ட வருவாய் அலுவலரை வைத்து விசாரணை மேற்கொள்வது ஒருதலைபட்சமாக இருக்க வாய்ப்புள்ளது என்றும் மன்றம் கருதுகிறது. எனவே உள்ளாட்சி மற்றும் வருவாய் துறைகளை சாராத குறிப்பாக நீதி துறையை சார்ந்த ஒருவர் மூலம் விசாரணை மேற்கொள்வதே முறையாக இருக்கும். எனவே இதற்கான நடவடிக்கைகளையும் எடுக்க மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களை கேட்டுக் கொள்ள வேண்டும்.

மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.